**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, PUDUKKOTTAI.**

**IDOP.No.28 /2015**

R.W.2 ரோஸ்மேரி க/பெ.சந்தியாகு நாள் – **19.01.2026**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

எதிர்மனுதாரரின் தகப்பனார் ஆசிரியராக பணிபுரிந்தவர் என்றால் சரிதான் . எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு சுமார் 60–70 ஏக்கர் நிலம் இருக்கும் . அதில் எதிர்மனுதாரருக்கு 20 ஏக்கர் ஒதுக்கி தென்னை மரம் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. கோட்டைக்காடு கிராமத்தில் நான் 50 வருடங்களாக வசித்து வருகிறேன். எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு சொந்தமான 60 ஏக்கருக்குள் தென்னந்தோப்பு உள்ளது என்றால் அதை எதிர்மனுதாரரின் சகோதரர் வைத்துள்ளார். எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு சொந்தமான 60 நிலம் சம்மந்தமாக எதிர்மனுதாரருக்கும் அவரது சகோதரருக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான் . இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் எதிர்மனுதாரருக்கு சாதகமாக நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் இல்லை . நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் , மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனக்கு படிப்பறிவு இல்லை . எனது முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல . பிரமாணபத்திரிக்கையில் சொல்லியுள் ஷோபா ஆசிரியர் சம்மந்தப்பட்ட குடும்ப விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர், மனுதாரர் மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஆலங்குடி நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் நான் சாட்சியாக இல்லை என்றால் சரிதான் . உண்மையாக எனக்கு விவரங்கள் தெரியும் என்றால் அந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல . மனுதாரர் வீட்டிற்கும் , எனது வீட்டிற்கும் சுமார் 300 அடி தூரம் இருக்கும். மனுதாரர் வீட்டிற்குள் நடக்கும் விவரங்கள் எனக்கு நேரடியாக

தெரியாது என்றால் தெரியும் . எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல . எனது கணவர் இறந்து 15 வருடங்கள் ஆகிறது . நான் தற்போது எதிர்மனுதாரர் வீட்டு பண்ணையில் வேலை பார்க்கிறேன் என்றால் என்னை அழைத்தால் வேலைக்கு செல்வேன் . நான் அவரது வீட்டில் வேலை பார்ப்பதால், எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*